## தலைப்பு - 011 – நிதி ஆணைக்குழு - 2024

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 011 நிதி ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 09 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதி ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நிதி ஆணைக்குவிழுவின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நிதி ஆணைக்குவிழுவின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகபரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மூலதன செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 300,000 ஆன மொத்த நிகர நிதியேற்பாடும் எந்தவொரு பயன்பாடுமின்றி சேமிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்கான மூலதன வடிவினாலான வாகன பழுதுபார்ப்புகளை எதிர்பார்த்து நிதியேற்பாடு கோரப்பட்ட போதிலும் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வாகன பழுதுபார்த்தல்களும் மீண்டெழும் வடிவிலானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் பூரணமாகவும் இயன்ற வரையிற் சரியாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்காக குறைவாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் நி.பி 66 இன் கீழ் கூட்டுத்தொகை ரூபா 8,245,000 | ஆண்டினுள் வெவ்வேறு காரணங்களினால் மதிப்பீடுகள் தாரிக்கும் போது எதிர்பார்க்கப்படாத செலவினங்கள் மேவுகை | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் பூரணமாகவும் இயன்ற வரையிற் சரியாகவும் வருடாந்த செலவின |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான மேலதிக நிதியேற்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. அவை ஒவ்வொரு ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 22 சதவீதம் தொடக்கம் 127 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டன. | செய்வதற்காக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்த செலவின விடயங்களிலிருந்து மாற்றுகை செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது. | மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 04 செலவின விடயங்களுக்காக மிகையாக நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையினால் அச் செலவின விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 2,885,000 ஆன நிதியேற்பாடு, நி.பி 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களுக்கு மாற்றுகை செய்யப்பட்டிருந்தது. அம் மாற்றுகை ஒவ்வொரு செலவின விடயங்களின் ஆரம்ப மதிப்பீட்டு நிதியேற்பாட்டில் 20 சதவீதம் தொடக்கம் 80 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 01/2024 மற்றும் 05/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமையினால் அத்தியாவசிய செலவினங்கள் மட்டும் ஏற்கப்பட்டதன் காரணத்தினால் சேமிக்கப்பட்ட நிதியற்பாடுகள், நி.பி 66 இன் கீழ் நிதியேற்பாடு போதுமானதாக காணப்படாத செலவின விடயங்களுக்கு மாற்றுகை செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் பூரணமாகவும் இயன்ற வரையிற் சரியாகவும் வருடாந்த செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3.2 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு செய்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருத்தப்பட்ட நிதி பிரமாணம் 371(5) இற்கு இணங்கப்படாமல் 2024 ஆம் ஆண்டில் மூன்று சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 170,000 ஆன உப கட்டுநிதி தீர்ப்பனவு செய்வதற்கு 13 தொடக்கம் 48 நாட்கள் வரையான காலம் கடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் முற்பணம் பெற்றுக் கொள்ளும் போது மற்றும் தீர்பனவு செய்யும் போது இவ்வாறான கைதவறல்கள் ஏற்பாடாதிருக்க குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி பிரமாணம் 371 (5) பிரகாரம் கட்டுநிதி தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | குறிக்கப்பட்ட மற்றும் அத்தியாவசியமற்ற பணிகளுக்காக கட்டுநிதிகள் பெற்றுக் கொள்ளப்படக் கூடாத போதிலும், முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டு | எதிர்காலத்தில் முற்பணம் பெற்றுக் கொள்ளும் போது மற்றும் தீர்ப்பனவு செய்யும் போது இவ்வாறான சம்பவங்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ளுமாறு | குறிக்கப்பட்ட மற்றும் அத்தியாவசிய பணிகளுக்காக மட்டும் முற்பணம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| குறித்த பணிகள் நிறைவு செய்யப்படாது 31 நாட்கள் தொடக்கம் 88 நாட்கள் வரையான காலம் கையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்து மீண்டும் தீர்ப்பனவு செய்யப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள தென குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரித்தல் தொடர்பாக பின்வரும் நலிவு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் இலக்க வழிக்காட்டின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய 12(அ), 12(இ), 12(உ) மற்றும் 12(ஊ) வழிக்காட்டிகளின் விடங்கள் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் இலக்க வழிக்காட்டின் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் 2025 ஆம் ஆண்டு தொடக்கம் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிக்காட்டிகள் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 4.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசியலமைப்பு ஏற்பாட்டின பிரகாரம் நிதி ஆணைக்குழுவினால் மூலதன அளிப்பின் கீழ் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி திட்டம் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கு மாகாண சபைக்கு நிதி பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும், அந் | நிதி ஆணைக்குழுவிற்கு நேரடியாக மாகாண சபைகளின் அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்களின் பின்னூட்டல் நடவடிக்கைகள் பிரயோக ரீதியில் மேற்கொள்ள முடியாத சட்டரீதியான பணிப்பொறுப்பிற்கு புறம்பான | நிதி பயன்பாடு தொடர்பாக மீளாய்வு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் முறைமையொன்று தயாரித்தல் மற்றும் தொடர்புடைய பரிந்துரைகள், |

| | | |
|---|---|---|
| நிதி முதலீடு செய்வது தொடர்பில் மேற்பார்வை மீளாய்வு மற்றும் பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வெளியீட்டு மட்டம் மற்றும் விளைவுகள் மதிப்பீடு செய்யும் முறைமையொன்று, நிகழ்காலத்தில் பொறுப்பு பணிக்கப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றினால் அல்லது தரப்பினரினால் மேற்கொள்ளப்படாததுடன் அது தொடர்பில் குறிப்பிடப்பட வேண்டிய பரிந்துரைகள் மீளாய்வாண்டிற்குரிய சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. | நடவடிக்கையாயினும், மாகாண சபைக்குள் காணப்படுகின்ற பின்னூட்டல் பொறிமுறை மற்றும் மதிப்பீட்டு முறைமை மிகவும் வலுவான மற்றும் வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு தேவைவான வழிக்காட்டிகள் தொடர்ந்தும் மாகாண சபைக்கு நிதி ஆணைக்குழுவினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. | சனாதிபதிக்கு முன்வைக்கப்படும் பரிந்துரை தொடர்பான அறக்கையில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்களுக்காக நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பாதீட்டு நிதியேற்பாடு பெற்றுக் கொடுக்கப்பட்ட போதிலும் போதுமான வண்ணம் திறைச்சரியினால் கட்டுநிதி விடுவிக்கப்படாமையின் காரணத்தினால் திட்டமிட்ட பிரகாரம் மாகாண அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு சாத்தியமற்றது போல பிரதேச சமச்சீர் அபிவிருத்தி அடைவதற்கான நோக்கம் அடையப்படவில்லை என அவதானிக்கப்படுகின்றது. | பொது திறைச்சேரியில் நிலவுகின்ற நிதி திலைமையின் பிரகாரம் சில ஆண்டுகளில் பாதீட்டின் ஊடாக ஒதுக்கப்பட்ட முழு நிதியேற்பாடும் மாகாண சபைகளுக்கு விடுவிக்கப்படாததுடன் இது தொடர்பில் நிதி ஆணைக்குழுவும் அவ்வப்போது அதிமேதகு சனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும் வருடாந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | போதுமான வண்ணம் திறைச்சரியிடமிருந்து கட்டுநிதி விடுவித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையினுள் பொது மின்னணு பெறுகை செயற்படுத்தல் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 2024 பெப்ரவரி 06 ஆந் திகதிய 08/2019 (ii) இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் ஊடாக 2023 ஏப்ரல் 19 ஆந் திகதிய 08/2019(i) ஆம் இலக்க மற்றும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை மீது கவனம் செலுத்தப்பட்டு, விலை ஒப்பீட்டு முறையின் (Shopping Method) கீழ் பொருட்கள் கொள்வனவு e–Gp முறைமை ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தொகை ரூபா 905,765 ஆன பொருட்களின் கொள்வனவு e – Gp முறைமை பயன்படுத்தப்படாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டினுள் சில சந்தர்ப்பங்களில் சந்தைக்கு சென்று பொருட்களை பரீட்சித்து பார்த்து தேவைக்கு பொருந்தும் பொருட்களை தெரிவு செய்து கொள்வனவு செய்வதற்கு நேர்ந்ததுடன் அச் சந்தர்ப்பங்களில் தவிர்த்து ஏனைய அனைத்து பெறுகைகளும் e–Gp முறைமை பயன்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் பொருட்கள் கொள்வனவிற்காக e–Gp முறைமை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு புத்தகம் மற்றும் CIGAS கணினி முறைமையின் நிலையான சொத்துக்களின் கீழான BOS Report ஒவ்வொன்றும் இணக்கம் செய்யும் போது 45 சொத்துக்கள் உருப்படிகளுக்கு தொடர்புடைய 399 சொத்துகளில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. | CIGAS முறைமையில் மற்றும் இருப்பு புத்தகத்தில் சில உருப்படிகள் வேறு பெயர்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருத்தல், பெறுமதி குறைவான உருப்படிகள் நுகர்வோர் பொருட்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருத்தல் போன்ற காரணங்களும் இதற்கு தாக்கமளித்துள்ளதென குறிப்பிடப்படடுள்ளது. | இருப்பு புத்தகங்கள் மற்றும் CIGAS கணினி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு திருத்தப்பட்டு நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | CIGAS மென்பொருளில் மற்றும் இருப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் உருப்படி பெயரிடல்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாதமையினால் CIGAS முறைமை ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற அறிக்கைகள், இருப்பு பொருட் பதிவேடுடன் இணைக்குவதற்கு இயலவில்லை. | இது தொடர்பில் பரீட்சிக்கப்பட்டு வருகின்றதுடன் எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. | CIGAS மென்பொருளினால் உருவாக்கப்படுகின்ற சொத்து குறியீடுகள் இருப்பு பொருட் பதிவேடுகளில் நாளதுவரையாக்கப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 86 ஆக காணப்பட்ட போதிலும், உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கை 70 ஆகியமையினால் 16 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 37 சதவீதமாகும். இவ்வாறு வெற்றிடங்கள் நிலவுகின்றமை ஆணைக்குழுவின் செயலாற்றல் மீது பாதகமாக தாக்கமளிக்குமெனில் விரவாக வெற்றிடங்கள் நிரப்புதல் அல்லது அவ் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்பட வேண்டுமென அவதானிக்கப்படுகின்றது. | சிரேஷ்ட நிலையில் 04 பதவிகள் தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் இலங்கை நிர்வாகச் சேவையின் II/III தரத்தின் வெற்றிடங்களள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்படுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | விரைவாக வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |